**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 164 of 2024 |

Depositions of PW - 4 witness for ________ { Prosecution / Defence / Court

Name : வரதராஜ்

Father's Name : முத்துசாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29th **day of September** 2025.

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் சூலூர் தாலுாக, சிந்தாமணிபுதூர், செல்வராஜபுரத்தில் குடியிருந்து கொண்டு டெக்ஸ்டைல் வியாபாரம் செய்து வருகிறேன். சிந்தாமணிபுதூர் மோஷன் ரெஸ்டாரன்ட் எதிரில் லக்கி மார்பில் சென்ற பெயரில் மார்பில்ஸ் கடை நடத்தி வரும் ராஜஸ்தானை சேர்ந்த பிரதீப் ராஜா என்பவர் எனது நண்பர் ஆவார். கடந்த 14.01.2024-ம் தேதி அன்று எனது நண்பர் ராஜஸ்தான் செல்ல தனது கடையின் வரவு செலவுகளை நிர்வகிக்க மாதவ்லால் என்பவரிடம் பார்த்துக் கொள்ளுமாறு சொல்லிவிட்டு செல்வதாக என்னிடம் கூறினார். மீண்டும் 19.01.2024 ஆம் தேதி திரும்ப தமிழ்நாடு வந்து கடைக்கு சென்று வரவு செலவு கணக்குகளை காலை 10 மணிக்கு பார்த்த பொழுது ஐந்து நாட்களில் வியாபாரம் செய்த பணம் ரூபாய் 5 லட்சத்து 65 ஆயிரத்து 20200 இருப்பதாக மேலாளர் மாதவ்லால் தன்னிடம் எடுத்து கொடுத்ததாகவும் தானே அதனை சரி பார்த்து வங்கியில் செலுத்துமாறு மாதவிடாய் அனுப்பி வைத்ததாகவும் ஆனால் மதியம் 2 மணி வரை

மாதவ்லால் கம்பெனிக்கு திரும்ப வராததால் போன் செய்து பார்த்தோம். அவரது செல்போன் சுவிட்ச் ஆப் செய்திருப்பதாகவும் பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை எனவும் ராஜஸ்தானுக்கு அவர்களது உறவினர்களுக்கு கேட்டும் எங்கு உள்ளார் என்பது குறித்து தனக்கு தெரியவில்லை எனவும் என்னிடம் கூறினார்.

2. பின்னர் 06.02.2024 ஆம் தேதி மாதவ்லால் மீது நடவடிக்கை எடுக்கும்படி புகார் அளிக்கலாம் என என்னிடம் சொன்னார். நானும் அவரிடம் கலந்து ஆலோசித்து அவர் சொன்ன விபரத்தை எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்தேன். என்னிடம் கட்டப்படும் புகார் என்னால் எழுதிக் கொடுக்கப்பட்டது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணைக்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை மேற்கொள்ளவில்லை.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.09.29 20:59:45 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**